இயற்கையின் எழிலை எடுத்தியம்பும் "சொபா சலன சித்துவம்" குறுந் திரைப்படப் போட்டி 2022

2022 ஜூன் 05 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச சுற்றாடல் தினத்தையொட்டி இப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- **தொனிப்பொருள்** - சுற்றாடலை மையமாகக் கொண்ட எந்தவொரு தொனிப்பொருளின் கீழும் படைப்புகளைச் சமர்ப்பிக்க முடியும்.

போட்டி நிபந்தனைகள்

- காலம் – ஆகக் கூடியது 05 நிமிடங்கள்.
- போட்டிப் பிரிவுகள் (02) – கற்பனைச் சித்திரம் மற்றும் விவரணச் சித்திரம்.
- மொழிமூலம் – சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் படைப்புகளைச் சமர்ப்பிக்க முடியுமென்பதுடன், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்படுகின்ற படைப்புகளுக்கு ஆங்கிலத்தில் உபதலைப்பு இடப்படுதல் வேண்டும். (சம்பாஷணை இல்லையெனில், இந் நிபந்தனை ஏற்புடையதாகாது)

- தொழில்நுட்ப நியமக்குறிப்பீடுகள் -
  - படப்பிடிப்புக்காக பொருத்தமான எந்தவொரு கருவியையும் பாவிக்கலாம். (உதாரணமாக கையடக்கத் தெலைபேசியைப் பாவித்து படப்பிடிப்பு மேற்கொள்ளப்பட்ட படைப்புகளைக் கூட சமர்ப்பிக்கலாம்).

  - அவ்வாறிருப்பினும் இறுதித் தயாரிப்பானது, விரிந்த அகலமான திரையில் ஒளியுரு படிவதற்குப் பொருத்தமான உயர் பிரிதிறனைக் (High Resolution) கொண்டதாக இருத்தல் வேண்டும்.

- படைப்புகளைச் சமர்ப்பித்தல் –
  - விண்ணப்பதாரியொருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட படைப்புகளைச் சமர்ப்பிக்க முடியும்.
  - ஒவ்வொரு படைப்பு சார்பிலும் வெவ்வேறான தரவுக் கோப்பொன்றாக (Data File) டீவீடீ இருவட்டு (DVD) பிரதியொன்றாக ஒப்படைத்தல் வேண்டும்.
  - உங்களது படைப்புகளை கீழ்க் காணும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் முன்வைக்கலாம்.
    sobachalana2014@gmail.com

- புலமைச் சொத்து தொடர்பான நிபந்தனை –
  - படைப்பின் உள்ளடக்கம் தொடர்பான முழுப் பொறுப்பும் படைப்பாளரைச் சாரும்.
  - படைப்பிற்காக பதிப்புரிமையிலிருந்து விலக்களிக்கப்பட்ட (Royalty free) அல்லது திறந்த கல்விசார் வளங்களாக (Open Educational Resources) காணப்படுகின்ற இசை அல்லது ஒலிகளைப் பாவிப்பதாயின், குறுந் திரைப்படத்தின் இறுதியில் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட மூலங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

- இறுதி உரிமை –

  - இப் போட்டிக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற குறுந் திரைப்படங்களை, பொருத்தமான சந்தர்ப்பங்களில் காட்சிப்படுத்தும் மற்றும் காட்சிப்படுத்துவதற்காக நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் உரிமை சுற்றாடல் அமைச்சைச் சாரும்.

- பிற நிபந்தனைகள் –

- படைப்பாளர்கள் தமது உண்மையான பெயரின் கீழ் மட்டும் திரைப்படங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
- படைப்பின் உரிமை அசல் படைப்புரிமையாளரைச் சாருதல் வேண்டும் என்பதுடன், பதிப்புரிமை மீறப்படுவதானது படைப்புகள் நிராகரிக்கப்படக் காரணமாக அமையும்.
- போட்டியின் மதிப்பீட்டு நடவடிக்கைகள், இத்துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய நடுவர் சபையொன்றினால் மேற்கொள்ளப்படும் என்பதுடன், நடுவர் சபையின் தீர்ப்பு இறுதித் தீர்ப்பாகும்.

❖ பரிசுகள் –

1 ஆம் இடம் – ரூ. 50,000.00
2 ஆம் இடம் – ரூ. 40,000.00
3 ஆம் இடம் – ரூ. 30,000.00
06 திறன் விருதுகள் – ரூ. 10,000.00

❖ முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு, பணப் பரிசில்களுக்கு மேலதிகமாக விருதுகளும், திறன் விருதுகளை வென்ற போட்டியாளர்களுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்படும்.
❖ பங்குபற்றும் எல்லா போட்டியாளர்களுக்கும் பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்.
❖ படைப்புகளை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி – 2022.05.27.
❖ விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு
    - இணையத்தளம் – www.env.gov.lk
    - முகநூல் பக்கம் – https://www.facebook.com/ sobachalana.sithuwam
    - மின்னஞ்சல் – sobachalana2014@gmail.com
    - தொலைபேசி - 011-2034175